
# சுட்டி

சுயம் வர மண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி.


— அப்துல் ரகுமான்




85
மாதமிருமுறை
மார்ச் '88
80 காசு

FREE E-BOOKS , www.thamizham.net.,


# தமிழ் பேசும் வானொலிகள்



| நிலையத்தின் பெயர் | அலைவரிசை சிற்றலை | கிழமைகள் | நேரம் |
|---|---|---|---|
| சென்னை ஆசிய சேவை | 19—25 | தினமும் | மா 5—00<br>6—00 |
| டில்லி ஆசிய சேவை | 41-49-60-76 | தினமும் | மா 5—30<br>6—15 |
| இலங்கை தமிழ்ச் சேவை | 49—60 | தினமும் | கா 5-முதல்<br>இ 11-வரை |
| இலங்கை ஆசிய சேவை | 25—41 | தினமும் | மா 5—00<br>7—00 |
| மலேசியா | 60 | தினமும் | கா 2-45/6-00<br>மா 4-30/8-30 |
| பாகிஸ்தான் | 19—25 | தினமும் | மா 2—30<br>3—15 |
| பீகிங் (சீனா) | 25—31 | தினமும் | மா 7—30<br>8—30 |
| மாஸ்கோ (ரஷ்யா) | 19—25—41 | தினமும் | மா 6-00/6-30<br>மா 6-30/7-30 |
| வாடிகன் சிட்டி | 31—41—49 | தினமும் | கா 7-00/7-15<br>இ 8-10/8-20 |
| வெரித்தாஸ் (பிலிப்பைன்ஸ் | 19—25 | தினமும் | கா 6-00/6-25<br>இ 7-25/7-55 |
| பி. பி. சி. (இங்கிலாந்து) | 31—41—94 | ஞாயிறு தவிர | இ 9—45<br>10—15 |

குறிப்பு : அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் நேயர் எண்ணிக்கை போதாதென்று கருதி 1975 ஆம் ஆண்டோடு தமிழ் ஒலிபரப்பை நிறுத்தி விட்டன. வேறு சில நாடுகளில் உள்ள தமிழ்ச் சேவை நிகழ்ச்சிகள் இந்தியாவில் கேட்காது.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# ஜெயலலிதாவிடம் நான்கு கேள்விகள் !

விளம்பர வெளிச்சத்துக்கு வந்துள்ள இன்றைய அரசியல்வாதிகள் யாரும் நமக்கோ, நாட்டுக்கோ நன்மை செய்வதற்காக அரசியலுக்கு வரவில்லை. தங்களுக்கும், தங்களைச் சார்ந்தோர்க்கும் நன்மை செய்யவே அவர்கள் அரசியலைப் பயன் படுத்தி வருகிறார்கள்.

மற்றபடி, மொழி, இனம், நாடு, தாய்க்குலம், கொள்கை போன்ற கூப்பாடுகள் அனைத்தும் பாமர மக்களை நம்பவைக்கும் வெறும் வேடப்புலம்பலே! இந்த முகத்திரையைக் கிழிக்கும் வண்ணம், நாம் சில கேள்விகள் கேட்போம்; ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொருவரிடம் கேட்போம்.
முதலில் ஜெயலலிதா..

1. நீங்கள் திடீரென அரசியலில் நுழைந்தபோது விட்ட அறிக்கையில் பொதுவாழ்வில் இறங்கி தொண்டாற்றவே வந்திருப்பதாகக் கூறினீர்கள். தமிழ்த் திரையின் முதல் வரிசை கதாநாயகியாக இருந்தபோது இந்தத் தொண்டுள்ளம் ஏன் தோன்ற வில்லை? திரைப்படத்துறையிலும் சொந்த வாழ் விலும் தோல்வியுற்ற பிறகு நீங்கள் அரசியலை நாடியது புகலிடமாகவா? அல்லது தொண்டாகவா?

2. ஆட்சிக்கு வந்தால்,எம். ஜி. ஆர்,பாதையில் தமிழகத்தை வழிநடத்திச் செல்வதாகக் கூறுகிறீர்கள். தமிழகம் எல்லாத்துறையிலும் பின்தங்கிய இந்தப் பத்தாண்டு ஆட்சியே எம். ஜி. ஆர், ஆட்சி; இதையே தான் மீண்டும் அப்படியே தமிழகத்துக்குத் தரப்போகிறீர்களா ?

3. "பெரும்பாலோர்க்கு நானொரு தாய், சகோதரி, மகள் என்னை ஒரு நடிகையாக அவர்கள் நினைப்ப தில்லை" என்று உங்கள் சினிமா கவர்ச்சியை மறுக்கும் நீங்கள், இவர்கள் உங்கள் மேல் இப்படியொருஉறவு கொண்டாட அவர்களுக்கு இது வரை வேறு என்ன செய்திருக்கிறீர்கள்?

4. நீங்கள்எம். ஜி.ஆர். மறைவுக்காக உடன்கட்டை ஏறுவது பற்றி சிந்தித்ததாகக் கூறினீர்கள். ஒழிக்கப்பட வேண்டிய இந்த மூடப் பழக்கத்தை நீங்கள்— "சித்தனைச் செல்வி" "புரட்சித்தலைவி" கடைப்பிடிக்க விரும்பியது, சமூக மாற்றத்திலும், பெண்கள் விடுதலையிலும் உங்களுக்கு எள்ளளவும் உடன்பாடில்லை என்பதை காட்டாதா? தான் திருமணம் செய்யாத ஒருவரின் மறைவுக்காக உடன்கட்டை ஏறும் பெண்ணின் ஒழுக்கம் பற்றிஎன்ன நினைப்பது? எம். ஜி. ஆரின் உடல் அடக்கம் தானே செய்யப்பட்டது; எரியூட்டப் படவில்லையே. அப்படியிருக்க நீங்கள் உடன்கட்டையேறுவதாகச் சொன்னது யாரைக்குழப்ப ?

[அடுத்து : சிவாஜிகணேசன்] —எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மாமன் மகளை மணக்க வேண்டாம்!

தென்னாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் உறவும், சொத்தும் விட்டுப் போகக் கூடாது என்பதற்காக, மிக நெருங்கிய உறவுக்குள் அதாவது ஒருவர் மாமன் மகள், அத்தை மகள், அக்கா மகள் போன்றோரை மணக்கும் வழக்கம் உள்ளது.


இங்கு நிலைமை இப்படியிருக்க வடநாட்டில் மேற்கண்ட உறவு முறையில் மணம் செய்விக்கவே மாட்டார்களாம். ஒரு வடநாட்டு நண்பரிடம் இது பற்றிக் கேட்டதற்கு, "எங்கள் பக்கத்தில் தன் சகோரியின் குழந்தைகளை, தன் குழந்தைகளாகவே எண்ணி அன்பு செலுத்துவான் தாய் மாமன். அதே போல மாமன் குழந்தைகளையும், அத்தையின் குழைந்தைகளையும், சகோதர சகோதரியாகவே எண்ணிப் பழகி வருகிறார்கள். அவர்களுக்குள் திருமணம் புரிந்து கொள்கிற வழக்கமே கிடையாது" என்று கூறுகிறார்.

மருத்துவரீதியாக நெருங்கிய திருமணத்தின் விளைவாக பிறக்கின்ற குழந்தைகள், குறையுடன் பிறப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. உடல் ஊனம், உடல் நலிவு, மன வளர்ச்சியின்மை, அறிவு மந்தம் போன்ற பலவீனங்களோடு இக் குழந்தைகள் பிறக்கக் கூடும். இவை ஒரு தலைமுறையில் வெளிப்படாமல் சில தலைமுறைக்குப்பின் சந்ததியைக் கூடப் பாதிக்கக் கூடும். நாங்கள் யாருக்கும் எந்தத் தீமையும் செய்ய வில்லையே, எங்கள் குழைந்தை ஊனமாக இருக்கிறதே, போன ஜென்மத்துப் பாவம் போலிருக்கிறது என்று நினைப்பது மூடத்தனம்; இவர்களின் மூதாதையர் யாரேனும் நெருக்கமான மணம் செய்திருப்பதன் விளைவே இது. நெருக்கத்தில் மணம் செய்ய கிறித்துவமதத்தில் தடையுள்ளது இக் காரணத்தினால் தான்.

இளவயது திருமணத் தடைச் சட்டம் கொண்டு வந்தது போல அரசே நெருங்கிய திருமணத் தடை சட்டம் கொண்டு வந்தால் மக்களின் ஒரு பகுதி நோஞ்சான் படையாக உருவாவதைத் தடுக்கலாமே.

—பத்மா மணியம்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# சுவரொட்டி ஒட்டும் பழக்கம்

புதுவைப் பல்கலைக்கழக தமிழியற் துறையில் ஒரு சமூக மானுடவியல் கண்ணோட்டத்துடன் சுவரொட்டி ஒட்டுதல்பற்றி ஆய்வு நடந்துள்ளது. புதுவை அண்ணாசிலை முதல் இராசா திரையரங்கு முடிய 19-11-87 முதல் 30-11-87 வரை ஒட்டப்பட்ட 84 சுவரொட்டிகள் பின்வருமாறு அமைந்துள்ளன :

| எண் | சுவரொட்டியின் வகை | எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | திரைப்படம் | 40 | 47. 6 % |
| 2. | அரசியல் கட்சிகள் | 18 | 21. 3 % |
| 3. | தொழிலாளர் | 4 | 4. 7 % |
| 4. | விடுதலைப் புலி ஆதரவு | 8 | 9. 5 % |
| 5. | வணிக விளம்பரம் | 9 | 10. 7 % |
| 6. | அரசு | 1 | 1. 1 % |
| 7. | நாடகம் | 3 | 3. 5 % |
| 8. | தில்லி அரசுஎதிர்ப்பு | 1 | 1. 1 % |

ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம். தமிழ்நாட்டிற்கும் இதுவே பொருந்தும். இந்த ஆய்வில் சில தூறல்கள் :-

◦° படிக்காத மக்கள் 60% மேல் உள்ள நிலையில் படித்தே அறியக் கூடிய சுவரொட்டி இடம் பெற்று செல்வாக்குச் செலுத்துவது முரண்பாடாய் உள்ளது.

◦° ஏனைய உலக மக்களையும், இந்திய மக்களையும் விட தமிழர்கள் சுவரொட்டிகளில் ஈடுபாடு காட்ட வரலாற்றுக் காரணங்கள் பல உண்டு, கி. பி. 4 முதல் மன்னர்கள் சுவர்களையே தகவல் சாதனமாகப் பயன்படுத்தினர். கோவில் சுவர்கள் கல்லெழுத்துச் சுவரொட்டிகள்.

◦° பொது அமைப்புகள் நலிந்து போய் மக்களை அறிவு அல்லது அறிவியல் அடிமட்டத்தை இயக்குவதை விடத் திரைப்படமும் அரசியலுமே ஆட்டிப் படைப்பதை இப்புள்ளி விவரம் உறுதிப்படுத்துகிறது.

*(நன்றி : தமிழியற் புலத்தலைவர்)*

FREE E - BOOKS , www.thamizham.net.,



# சிக்கன நாள் காட்டி

16 பக்கமுள்ள செய்தித்தாள் 1000 பிரதிகள் மட்டும் தயாரிக்க 3 மூங்கிலும் 2 யூகிலிபடிஸ் மரமும் அழிக்கப்படவேண்டும்.

இந்தியாவில் படிக்கவும், எழுதவும், மேல்சுற்றவும் பிற தேவைகளுக்கும் 12 லட்சம் டன் காகிதம் தேவைப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. காடுகள் நிர்மூலமாக்கப்படுகின்றன.


நாளுக்கு நாள் மூலப்பொருள் குறைந்து வருகிறது. மாற்று மூலப்பொருள் தேடும் முயர்ச்சியும் இல்லை. எனவே காகித விலை விஷ வேகத்தில் ஏறிக்கொண்டே போகிறது.

இது காலந்தேர் வியாபாரத்தையும் பாதித்துள்ளது. 12 பக்க காலந்தேர் போட்டவர்கள் 6 பக்க காலந்தேருக்கும் 6பக்கம் போட்டவர்கள் 3பக்கத்திற்கும் விலையைச் சமாளிக்க முடியாமல் இறங்கிவிட்டார்கள். சிலர் ஒரு பக்க காலந்தேருக்குமேல் வாங்க சக்தியில்லையென்கிறார்கள்.

ஒரு பக்க காலந்தேரில் தேதி, கிழமை கண்ணுக்குப்புலப்படாத வகையில் சிறிதாக உள்ளது. பங்களூரைச்சேர்ந்த கே. விஸ்வநாத் என்ற இளைஞர் ஒரே பக்கத்தில் எல்லா மாதங்களையும் அடக்கக்கூடிய சிக்கன காலந்தேரத் தயாரித்துள்ளார் தெளிவாகவும் பெரிதாகவும் இதனை அச்சிட்டுக்கொள்ளலாம். 1988க்குரிய சிக்கனக் காலந்தேர் இது, வெட்டிபையில் வைத்துக்கொள்ளலாம்.

| மே | பிப் ஆக | மார்ச் நவ | ஜீன் | செப் டிச | ஜன ஏப் ஜுலை | அக் | காலந்தேர் 1988 |
|---|---|---|---|---|---|---|---|
| ஞா | தி | செவ் | பு | வி | வெ | ச | 1 8 15 22 29 |
| தி | செ | பு | வி | வெ | ச | ஞா | 2 9 16 23 30 |
| செ | பு | வி | வெ | ச | ஞா | தி | 3 10 17 24 31 |
| பு | வி | வெ | ச | ஞா | தி | செ | 4 11 18 25 |
| வி | வெ | ச | ஞா | தி | செ | பு | 5 12 19 26 |
| வெ | ச | ஞா | தி | செ | பு | வி | 6 13 20 27 |
| ச | ஞா | தி | செ | பு | வி | வெ | 7 14 21 28 |

FREE E - BOOKS , www.thamizham.net.,



# மூக்குக் கண்ணாடியின் கதை

சூரியனின் கதிர்களை ஓரிடத்தில் குவியச் செய்ய குவி லென்சுகளை உபயோகிக்கும் முறை கி.மு.விலேயே இருந்துள்ளது. ஆனால் சிறிய பொருட்களைப் பெரிதாக்கிக் காட்டவும் லென்சுகளைப் பயன்படுத்தலாம் என்பதை கி.பி. முதல் நூற்றாண்டில் செனகா என்னும் ரோமானிய அறிஞர் கண்டுபிடித்தார். பின் 13ம் நூற்றாண்டில் ரோஜர் பேகன் என்ற ஆங்கிலேய அறிஞர் இந்த லென்சுகளைச் சற்று தேய்த்து சீர்படுத்தி தமக்காக ஒரு மூக்குக் கண்ணாடியை உருவாக்கினார். இதனைச் சிறிய எழுத்துக்களையும் படிக்க உதவும் பூதக் கண்ணாடி என்று அவர் குறிப்பிட்டார்.

பேகனது இந்த உத்தியைப் பயன்படுத்தியே இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரில் முதல் மூக்குக் கண்ணாடி தயாரிக்கப்பட்டது. இவற்றில் எட்டப் பார்வையை மட்டுமே சரி செய்யும் குவி லென்சுகளைப் பயன்படுத்தினர். 15ம் நூற்றாண்டில் தான் கிட்டப்பார்வையைச் சரி செய்ய குழி லென்சைப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது.

தொடக்க காலங்களில் மூக்குக் கண்ணாடிகள் கரடுமுரடாகவும் விலை உயர்ந்தனவாகவும் இருந்தது மட்டுமன்றி கேலிக்குரிய பொருளாகவும் கருதப்பட்டன. 18ம் நூற்றாண்டு வரையில் கூட நான்கு பேர் கூடும் இடத்தில் கண்ணாடி அணிந்திருப்பது கெட்ட பழக்கமாகவே கருதப்பட்டது.

1780ம் ஆண்டு பெஞ்சமின் பிராங்கிளின் என்னும் மாமேதை ஐக்கிய அமெரிக்காவின் பிரெஞ்சு தூதராக நியமிக்கப்பட்டார். இவர் ஒவ்வொரு முறையும் படிக்க ஒரு கண்ணாடி, பார்க்க ஒரு கண்ணாடி என்று மூக்குக் கண்ணாடிகளை மாற்ற வேண்டியிருப்பது கண்டு மிகவும் எரிச்சலுற்றார். அவரது இந்த எரிச்சலில் பிறந்தது தான் பைஃபோகல் என்னும் இரு லென்சு கண்ணாடி.

பார்க்கவும், படிக்கவும் ஏற்றவாறு ஒரே மூக்குக்கண்ணாடியில் இருவித லென்சுகளைப் பொருத்தும் முறையை இவர் அமைக்க முன்னோடியாகத் திகழ்ந்தவை 'அனா லெப்ஸ்' என்னும் ஒருவகை மீன்கள். பெரும்பாலான நேரங்களில் இரைதேடி நீர்மட்டத்திலேயே இருக்கும் அதே நேரத்தில் நீருக்கடியிலிருந்து பெரிய மீன்களின் தாக்குதலிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் வேண்டும். அதனால் தரை மேலும் நீரினுள்ளும் தெளிவாகப் பார்க்க வசதியாக இரு லென்சுகள் கொண்ட கண்கள் இதற்கு அமைந்துள்ளன. இந்த மீன்களின் கண் அமைப்பை வைத்தே திரு. பெஞ்சமின் பிராங்களின் பைஃபோகல் கண்ணாடியை உருவாக்கினார்

நமது தஞ்சையில் கூழாங்கற்களை நன்கு தீட்டி உருமாற்றி மூக்குக் கண்ணாடிக்கு மலிவாகப் பயன்படுத்துகிறார்கள்.

—ரேவதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது கறிவேப்பிலை மருத்துவம்

கறிவேப்பிலை தூக்கி எறிவதற்கல்ல-உண்பதற்கே. இதனை உண்டால் உடலில் சேரும் சத்துகள் :-

புரதம், இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், கொழுப்பு, கார்போ ஹைட்ரேட், வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி'-இவற்றால் கண்பார்வைக் கோளாறுகள் அணுகா; எலும்புகள் ஏற்றம் பெறும்; சோகைநோய் அண்டாது; இது மட்டுமா :-

- தொற்று நோய்கள் ஊரில் இருந்தாலும் நமக்கு வராமல் தடுக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.
- புண்கள் விரைவில் ஆற கருவேப்பிலை உதவும், சிறப்பாக வாய்ப்புண் குணமாகும் பல் ஈறு, வலுவாகும்
- வயிறு தொடர்பான சிக்கல்களை விரட்டியடிக்கும் வலிமை இதற்குண்டு. மலச்சிக்கலைப் போக்கும்; ஜீரண சக்தியை மிகுவிக்கும்; பேதியைக் கட்டுப்படுத்தும்; பித்தத்தை மாற்றி வாந்தியைத் தடுத்து வயிற்று இரைச்சலைத் தொலைக்கும்.
- தலைமுடி வளரவும், வனப்பாக விளங்கவும் கண்களுக்கு ஒளிதரவும், சுக்கிலம் விருத்தியடையவும் கறிவேப்பிலையில் உள்ள ஊட்டச் சத்துகள் உதவும்
- முகத்தில் அம்மை வடுவா? கவலை வேண்டாம். கறிவேப்பிலை ஒரு பிடி, கசகசா ஒரு கரண்டி, கஸ்தூரி மஞ்சள் ஒரு துண்டு, அம்மியில் வைத்து அரைத்து முகத்தில் தடவுங்கள்; அரை மணி ஊறுங்கள்; பின் கழுவுங்கள். இது போல 15 நாட்கள் செய்து பாருங்கள். அம்மைத் தழும்புகள் அடியோடு மறையும்.
- பசி எடுப்பதில்லையா? ஜீரண மந்தமா? கறிவேப்பிலையை வறுத்து மிளகு, சீரகம், சுக்கு இவற்றைப் பொடி செய்து உப்புச் சேர்த்து சோறுடன் பிசைந்து உண்ணுங்கள். பசி கிளர்ந்தெழுந்து "கொண்டு வா" "கொண்டு வா" என்பீர்கள்.

—சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



புத்தகப் பிழிவு :

# ஆழ்ந்த அமைதி

ஜவகர்லால் நேருவின் தங்கையான கிருட்டிணாவை மணந்தவர் திரு. இராசாகத் தீசிங் இந்தியாவின் குறிப்பிடத் தக்க இதழாளர். இவர் 1951லும் 1952லும் இரு முறை சீனாவுக்கு சென்று வந்து எழுதிய நூல் "The Great Peace", இதனை திரு. ப. சொக்கலிங்கம் மொழிபெயர்த்து "ஆழ்ந்த அமைதி" என்ற பெயரில்தமிழ் நூலாக்கியுள்ளார்.

சீனாவில் நடந்த புரட்சியையும், பின் அமைந்த புரட்சி அரசையும் கேலியோடு பார்த்துப் பழித்து எழுதப்பெற்ற நூல் இது எனினும் இவர் அறிந்தோ அறியாமலோ சீனாவில் கீழ்க்கண்ட அற்புத மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதைக் குறித்துள்ளார் :

ஃ மேலை நாட்டில் பயின்று, ஆங்கிலம் தெரிந்த சீனர் கூட ஆங்கிலத்தில் பேசுவதில்லை. ஆங்கிலத்தில் பேசாது இருப்பதை அவர்கள் தம் நாட்டுப் பெருமை என்று கருதுகின்றனர்.

ஃ பல ஆண்டு காலம நிலம் இல்லாமல் உழைத்த உழவர் பெருமக்கள் நிலம் பெற்றுப் பெருமகிழ்ச்சி அடைவதைக் கதை கதையாகப் பேசிக் கொள்கின்றனர்.

ஃ அரசாங்கப் பணியாட்கள் பலர் சம்பளம் பெறுவது இல்லை. அவர்களுக்குத் தங்கும் வசதி, உணவு ஆகிய அனைத்தும் அரசால் தரப்படுகின்றன.

ஃ 3 நாட்கள் செலவிற்கு மேல் ஒருவர் கையில் பணம் வைத்திருக்கக் கூடாது

ஃ சீனர்கள் 5 வித அன்பைக் குறிப்பிடுகிறார்கள் : 1. நாட்டின் மேல் அன்பு 2. மக்களின் மேல் அன்பு 3. உழைப்பின் மேல் அன்பு 4. அறிவியலின் மேல் அன்பு 5, பொதுச் சொத்தின் மேல் அன்பு.

ஃ தங்கப் பரிமாற்றம் செய்தல் கூடாது. மக்கள் தங்கத்தை வங்கியில் செலுத்திவிட வேண்டும்.

ஃ இலஞ்சம், அரசாங்கச் சொத்தைத் திருடுதல் மிகக் கடுமையான குற்றங்கள்; பொது மக்கள் முன்பு விசாரணை நடக்கும். இக்குற்றவாளிக்கு கருணை காட்டாது, இவர்களை சுட்டுக் கொல்வது களை எடுப்பதாகக் கருதப் படுகிறது.

—அறம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தேர்தல் வாக்குறுதிகள்

"முதலில் வாக்குறுதிகளை வழங்கிவிடுங்கள். தேர்தலில் வெற்றி பெற்றபின் ஏன் வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியவில்லை என்று சமாதானம் சொல்லுங்கள். அப்போதுதான் நீங்கள் உண்மையான அரசியல்வாதி" என்று வின்ஸ்டன் சர்ச்சில் சொன்னார். நமது அரசியல்வாதிகள் வழங்குவதோடு சரி. தேர்தலுக்குப்பின் வாக்குறுதிகளையே மறந்துவிடுகிறார்கள். தேர்தல் வரப்போகிறது. அரசியல் கட்சிகள் போட்டிப்போட்டுக்கொண்டு வாக்குறுதிகளைக் கூறும். அநேகமாக கீழ்க்கண்டவாறு இருக்கலாம்.

0 *விலைவாசி குறையும். நியாய விலைக் கடைகள் பரவலாகத் திறக்கப்படும். ரேஸன் கடைகளில் விநியோகம் சீரமைக்கப்படும்.*

0 *சத்துணவுத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். சத்துணவில் வேலைப் பார்ப்பவர்கள் அரசு ஊழியர்களாக்கப்படுவர்.*

0 *அனைவரும் சிறுதொழில்கள் தொடங்க வசதி செய்யப்படும். சுய வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு உடனடியாகக் கடன்கள் வழங்கப்படும்.*

0 *வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டத்தின் கீழ் வேலையற்றவர்களே இல்லை என்கிற நிலை ஏற்படும். வேலை இல்லா பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கும் வரை மாதம் ரூ. 150 கொடுக்கப்படும்.*

0 *அரசு ஊழியர்களுக்கு பண்டிகை காலங்களில் 30 சதவீதம் போனஸ் வழங்கப்படும்.*

0 *அனாதைப் பிணங்களை அடக்கம் செய்ய ரூ. 100 கர்ப்பிணிகளுக்குப் பேறுகாலம் வரை சத்துணவிற்காக ரூ. 500.*

0 *இலவச பற்பொடி. இலவச குடை. இலவச காலணி. இலவச... ......*


## வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு,
பெருமாள் பேட்டை, சென்னை-7
தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,



# ஒரு நாள் கூத்து!

நாடகம்

இடம்: புறநகரில் ஒரு குட்டிபங்களா.

பின்னணி: சிகரெட் பீடி புகை, அயல் நாட்டு மது மற்றும் உள்ளூர் சாராயகலப்பு வாசனை.

பாத்திரங்கள்: வட்ட செயலாளர் துரை, மற்றும் அவரது நம்பகமான கட்சியினர்.

தொண்டர் 1: ஊர் முழுசும் பேனர் கட்டியாச்சு. போஸ்டர் ஒட்டியாச்சு.

துரை: பஸ்ஸில் எல்லாம் போஸ்டர் ஒட்டினிங்களா?

தொண்டன் 2: பஸ்காரங்க முறைச்சானுங்க. சூப்பிரண்டை பார்த்தோம், 'சட்டப்படி ஒட்டக் கூடாது. எங்களுக்குத் தெரியாதமாறு ஒட்டிப்புடுங்க'ன்னாரு.

துரை: (கிளாசை உறுஞ்சிக் கொண்டு) எட்டு வளைவுகளையும் கட்டியிருப்பானுவோ. மூன்று இடங்களில் தென்னைமர உயரத்துக்கு 'கட்அவுட்' இந்நேரம் வச்சிருப்பானுவோ. நைட் போய் பார்ப்போம்.

தொண்டர் 1: (துரையின் காலைப் பிடித்துக்கொண்டே) தலைவரு பத்து இடத்துல கொடி ஏத்தறார். ஹைவேஸ் காரங்க இரண்டு எடத்துல ட்ராபிக் இடைஞ்சல்ன்னு கொட்டகையை இடிச்சிட்டாங்க.

துரை: ஆட்சிக்கு வந்ததும் பார்த்துப்போம் ..... தலைவரு வர்றப்ப நம்ம போஸ்டர், கட்-அவுட்டுகள் கண்ணில் படணும். இந்த ஊரைப் பொறுத்தளவுல எனக்குதான் செல்வாக்குன்னு தலைவர் நெனச்சி எனக்கே எம். எல், ஏ. சீட் தரணும் .. மணி......வசூல் எப்படி...?

மணி: அறுபதாயிரம் வசூல் பண்ணினோம். இந்த கூட்டத்துக்கு ஐம்பது செலவாயிருக்கு இது வரைக்கும். பத்தாயிரம் நாளைக்கு கூட்டத்தப்ப வேணும்.

துரை: நம்ம கட்சி எட்டப்பனுவே எவ்வளவு போட்டிக்கு செலவு செஞ்சிருக்கானுக?

மணி. *நாற்பது செலவுன்னு சொன்னானுவோ......*

தந்திஊழியர்: *சார் தந்தி! (உள்ளே நுழைந்து கொண்டே)*

துரை: *டேய் பிரிங்கடா! தலைவரு ஏதாவது தகவல் சொல்லியிருப்பாரு.*

மணி: PROGRAMME CANCELED. UNABLE TO ATTEND—LEADER

—ஸ. ஜெ. சூர்யா

(ஓர் உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றது.)

FREE E - BOOKS , www.thamizham.net.,



# உண்மை சொல்லும் இயந்திரம்

சின்னஞ்சிறு கதை ;

ஜான் என்பவர் நியூயார்க் விமான நிலையத்துக்குப் போய் போஸ்டன் செல்ல டிக்கெட் வாங்கினார்.

விமானம் புறப்படச் சிறிது நேரம் இருந்ததால் அங்கிருந்த எடைபார்க்கும் இயந்திரத்தில் காசைப் போட்டார்.

அது கணிப்பொறி இயந்திரம். ஒரு சிறு அட்டை வந்து விழுந்தது, "உங்கள் பெயர் ஜான். எடை 188 பவுண்டு. போஸ்டனுக்குச் செல்ல 2-20-க்குப் புறப்படும் விமானத்தில் புறப்படப் போகிறீர்கள்" என்று அந்த அட்டையில் பொறிக்கப்பட்டிருந்தது.

தன்னைப்பற்றி எல்லா விவரங்களும் மிகச்சரியாக இருப்பதைக் கண்ட ஜானுக்கு ஒரே வியப்பு.

அந்த இயந்திரத்தைச் சோதித்துப் பார்க்க மறுபடி ஏறி நின்று காசைப் போட்டார்.

அட்டை வந்து விழுந்தது.

"இன்னமும் உங்கள் பெயர் ஜான்தான். உங்கள் எடை 188 பவுண்டுதான். போஸ்டனுக்குப் போக 2-20 விமானத்தில் புறப்படப் போகிறீர்கள்" என்று அதில் இருந்தது.


ஜானுக்கு வியப்புத் தாளவில்லை. ஆனால் இந்த இயந்திரத்தை முட்டாளாக்க வேண்டும் என்று மனக் குறுகுறுப்பு. டாய்லட்டுக்குப் போய் உடையை மாற்றிக் கொண்டு திரும்பி வந்து ஏறி நின்று காசைப் போட்டார்.

அட்டை வந்தது.

"உங்கள் பெயர் இன்னமும் ஜான்தான். எடை 188 பவுண்டு தான். ஆனால் போஸ்டனுக்குச் செல்லும் 2-20 விமானத்தைத் தவற விட்டு விட்டீர்கள்" என்று அதில் இருந்தது.

*****

FREE E - BOOKS , www.thamizham.net.,



# டீ குடிப்பது உயிருக்கு ஆபத்து

டீ குடிப்பது நல்லதா கெட்டதா என்ற சர்ச்சைக்கு முடிவு உண்டா? இந்திய விஞ்ஞானிகள் தற்போது தேநீர் பற்றிய ஆய்வில் தங்கள் முடிவுகளைக் கூறியுள்ளனர். ஐ. டி. ஆர். சி. என்ற அமைப்பு தொழிற்சாலை தயாரிப்புகளில் உள்ள நச்சுத் தன்மையை அளவிடுவதாகும். இது லக்னோவில் உள்ளது. இதைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தேநீரில் உள்ள நச்சுத்தன்மை பற்றிய ஆய்வை நடத்தி அறிவித்த முடிவுகள் வருமாறு :

ஈயம் என்ற உலோகச்சத்து தேயிலையில் உள்ளது. சுடுநீரில் தேயிலையைப் போடும் போது ஈயமும் நீரில் சேர்கிறது. அதிக நேரம் தேயிலை நீரில் இருந்தால் ஈயத்தின் அளவும் அதிகரிக்கிறது.

டிகாஷன் ஸ்டிராங்காக இருக்கும் போதும் சூடு அதிகமாக இருக்கும் போதும், அதில் உள்ள ஈயத்தின் அளவு அதிகமாகிறது. இந்தத் தேநீரை அப்படியே குடிப்பதால், அதில் உள்ள ஈயம் உடலுக்குள் செல்கிறது. இந்த ஈயத்தைக்கிரகிக்கும் தன்மை உடலுக்கு இல்லை. ஆனால் பாலின் அளவை மிகுவிக்கும் போதோ, எலுமிச்சஞ்சாறு கலக்கும் போபோதா தேநீரில் உள்ள நச்சுத் தன்மை குறைகிறது. ஈயத்தை உடல் ஓரளவு ஏற்றுக் கொள்ளும் வண்ணம் இவை செயல்பட்டாலும் முழுத்தீமையை அகற்றுவதில்லை.

உடலில் ஈயம் அதிகமாகச் சேர்ந்தால் என்னாகும்? ஞாபகமறதி, சிறுநீரகக் கோளாறு போன்று பல்வகை பிரச்சனைகள் ஏற்படும் கர்ப்பமான பெண்கள் அடிக்கடி தேநீர் குடிப்பதால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் ஆபத்து ஏற்படும்.

அறவே தேநீரை குடிக்காமல் இருப்பது நல்லது. அப்படி விடமுடியாதவர்கள் அதிகம் பால் கலந்து அல்லது எலுமிச்சஞ்சாறு கலந்த தேநீரை குடிக்க வேண்டும். அடிக்கடி சூடான ஸ்ட்ராங்கான தேநீர் அருந்துபவர் உயிருக்கு ஆபத்து நிச்சயம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள்.

— சந்திரசேகரன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# "சுட்டி" பற்றிய அறிக்கை

## 4-வது பாரம் (6-வது பிரிவுப்படி)

1. வெளியிடும் இடம் : 1494, அண்ணா நகர், சென்னை-600 040.
2. வெளியிடும் காலம் : மாதமொரு முறை.
3. அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன்.
   தேசிய இனம் : இந்தியர்.
   முகவரி : ரவீந்திரன் பிரஸ் 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005.
4. வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன்.
   தேசிய இனம் : இந்தியர்
   முகவரி : 1494, அண்ணா நகர், சென்னை-600 040.
5. ஆசிரியார் : கு. நாராயணபாரதி.
   தேசிய இனம் : இந்தியர்.
   முகவரி : ஜெயஹனுமான் அச்சகம், சென்னை-600 053.
6. பத்திரிகையின் மொத்த முதலீட்டில் 1%க்கு மேல் பங்குடையோர், உரிமையுடையோர் பெயரும், முகவரியும்.

   1. கே. என். கமலா, ஜெயஹனுமான் அச்சகம், சென்னை-600 053.
   2. ஏ. கே. எம். ராஜு 336, அண்ணா நகர் விரிவு, சென்னை-600 107.
   3. நிர்மலா சுந்தர் AP-742, அண்ணா நகர், சென்னை-600 040.

கி. இராமச்சந்திரன் ஆகிய நான் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மை என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாள் : 29-2-88


(ஒப்பம்) கி. இராமச்சந்திரன்
வெளியிடுபவர்.

## சுட்டி இலவசம்

சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## இணைப்புக் கடிதங்கள்



பத்திரிகைகளில் போட்டி அறிவித்தால் போட்டி பற்றிய விபரங்களோடு இறுதியாக, 'கடிதப் போக்குவரத்து எதுவும் வைத்துக்கொள்ள கூடாது' என்று அறிவிப்பும் வரும். அப்படிப் போடவில்லையென்றால் நிறைய சிபாரிசுக் கடிதங்களோடு போட்டிப் படைப்புகளை அனுப்பத் தொடங்கி விடுவார்கள். பத்திரிகை அலுவலகங்களுக்கு இது பெருத்த தலைவலியாகிவிடும்.

ஆரம்ப எழுத்தாளர்கள் கதை அனுப்பும்போது கதையைவிட பெரிதாய் கடிதம் இணைக்கிறார்கள். 'நான் வேலையில்லாமல் அவதிப்படுகிறேன்—இந்தக் கதையை பிரசுரித்து பணம் அனுப்புவீர்களானால் வாழ்நாள் முழுவதும் உங்களை மறக்கமாட்டேன்' இந்த வகையில் சில கடிதங்கள் வரும். கதையே நன்றாக இருந்தாலும் மேற்படி வரிகள் கதையின் தரத்தைக் குறைத்துவிடுகின்றன.

தீவிரவாத எழுத்தாளர்கள் சிலரும் இருக்கிறார்கள் 'இந்தக் கதையை பிரசுரிக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன்!' என்று எழுதுவார்கள்.

கதையோடு இணைத்து வாழ்க்கை வரலாறும் சிலர் எழுதுகிறார்கள். 'இதுவரை 43 சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. தேவி–10; ராணி–7; குமுதம்–1; மாலைமுரசு–13.........' கதையைப் படிப்பதோடு மட்டுமின்றி இதை வேறு படிக்க வேண்டிவரும். பத்திரிகை அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் நிச்சயம் மற்ற பத்திரிகைகளைப் பார்ப்பார்கள். யார் யார் எழுதுகிறார்கள் என்ற விவரம் தெரிந்திருக்கக் கூடும். இப்படி எழுவது தேவையற்றது.

இதுபோன்ற கடிதம் இணைக்கும் எழுத்தாளர்கள் கவனத்தைக் கதைகளில் செலுத்த வேண்டும். படைப்பு நன்றாக இருந்தால் ஆசிரியரே எழுதி விவரம் கேட்கக் கூடும்.

ஓர் எழுத்தாளனுடைய படைப்பே அவனைச் சிபாரிசு செய்ய வேண்டும். வேறு எந்தக் கடிதமும் தேவையில்லை. 'இந்தக் கதை என்னுடைய சொந்த கற்பனையே...இது சத்தியம்' என்றெல்லாம் சத்தியப்பிரமாணம் எடுக்கத் தேவையில்லை. 'சொல் புதிது சுவை புதி'தாக இருந்தால் அந்த சந்தேகங்களெல்லாம் வருமா?

—மிஸ்டர் ஒய்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

**மனப்பிரவாகம் (11-00) சொற்கோலம் :**
என். ஆர். தாசன், வெளியீடு பத்மா பதிப்பகம் 53 என் ஜி. ஓ. காலனி குரோம்பேட்டை, சென்னை-600 044.

**மார்கழிவீதி (4-00) கவிதைகள் வல்லம் தாஜீபால்,**
வெளியீடு :- தமிழன்னை நூலகம், கூறைநாடு, மயிலாடு துறை-2.

**நம் ஊர் நெப்போலியன்கள் (18-00) சிறுகதைத்தொகுப்பு**
இலக்கியத்தென்றல் கலைமாமணி அடியார். வெளியீடு:- நீரோட்டம் பதிப்பகம் 'அடியார் இல்லாம்' 7, கர்ணன் தெரு, ரங்கராஜபுரம், சென்னை-600 0024.

**உதயம் (3-00) கவிதை தொகுப்பு கவிஞர் செ. இ. இளந்திரையன்**
வெளியீடு :- சிலம்பு பதிப்பகம், செல்லியம் பாளையம், மின்னாம்பள்ளி அஞ்சல், சேலம்-636106

**எண்ணங்கள் என்னுடையவை (10-00) கட்டுரைகள்**
ஜோதிர்லதா கிரிஜா, வெளியீடு :- இமயம் பதிப்பகம் 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம்,

**சிந்தனைச் சிதறல்கள் (2-00) கவிதைகள்.**
தங்கவயல் கி. சீனிவாசன், வெளியீடு:- முத்தமிழ் இலக்கியப் பேரவை சுவர்ணா நகர், இராபர்ட்சன்பேட்டை, தங்கவயல்-563122 கர்நாடகம்.


**விடுதலைப் பாதையில் இந்தியா (4-00)**
பகத்சிங்கின் நவஜவான் பாரதசபை பற்றிய அறிமுகம். தமிழில் : பாரதிப்பிரியா கிடைக்குமிடம் :- பொன்னி, 12. முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20.

**ஈழம் மறைக்கப்பட்ட உண்மைகளும் துக்ளக் 'சோ'வுக்குப் பதிலும்**
வெளியீடு ;- தமிழ் நாடு தமிழ் ஈழ நட்புறவுக் கழகம் 8, சத்திசாலை, ஈரோடு-638003.

**சொல்லூறத சொலலிப்புட்டேன் (6-00) கவிதைகள்.**
ஜீவபாரதி, கனிமுத்துப்பதிப்பகம், அம்பாள் பில்டிங் 727, அண்ணா சாலை, சென்னை-600 006.

ஆசிரியர் : கு. நாராயண பாரதி, வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன், அச்சிடுபவர் : எம். எஸ். ரவீந்திரன். ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, சென்னை-600 005 முகவரி 1494, அண்ணா நகர், சென்னை-600 040.

FREE E - BOOKS , www.thamizham.net.,



## நூறு வீடுகளுக்கு ஒரு சமையலறை

நம் பெண்களில் பலரும் சம்பளம் வாங்காச் சமையல் காரிகளாகவே காலங்காலமாக இருந்து விட்டார்கள். குடும்பம் ஒரு நாளைக்கு 30 நிமிடம் சாப்பிடுவதற்காக, சமையலறையில் சுமார் 6 மணி நேரம் வேலை நடக்கிறது. சாரசரி பெண்களின் வாழ்நாளில் குறைந்தது 25% சமையலறைகளில் கழிகிறது.

வீட்டின் மொத்தப்பரப்பளவில் சுமார் 10% இடத்தை சமையலறையும், 15% இடத்தை மேல் நடுத்தர குடும்பங்களுக்கு சாப்பாட்டு அறையும் அடைத்துக் கொள்கின்றன. சில நூறு வீடுகளுக்கு ஒரு பூங்கா, பால் வழங்குமிடம் சிறுவர் விளையாட்டுத்திடல் என்று வீட்டு வசதி வாரியம் புதிய குடியிருப்புப் பகுதியில் திட்டமிடுவது போல, 100 வீடுகளுக்கு ஒரு சமையலறை கட்டலாமே. 100 வீட்டுக்காரர்கள் அமைக்கும் கூட்டுறவு சங்கம் "மெஸ்" போல இந்த சமையல் கூடத்தை நடத்தலாமே.

மொத்தமாக சமையல் செய்யும் போது, மொத்த விலைக்குப் பொருட்கள் பெறப்படுவதால், வீட்டில் ஆவதை விட சமையல் செலவு குறையும். புதிய சமையல் கூடங்கள் வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும் வேலை முன்னுரிமை, இதனைப் பயன்படுத்தும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

எண்ணற்ற நன்மைகளைச் சிந்தியுங்கள் :

சமையல் வாயுவுக்கு, எண்ணெய்க்குத் திண்டாட வேண்டாம்- ரேஷன் கடைகளில் க்யூ நிற்க வேண்டாம்- மளிகைக் கடையில் மண்டியிட வேண்டாம். காய்கறிக்காரரிடம் பேரம் பேசும் சங்கடம் இல்லை- கிரைண்டர், மிக்சி, குளிர்ப்பெட்டி வாங்கும் அவசியமே ஒழியும். பாத்திர பண்டங்கள் இடத்தை அடைக்காது. பாத்திரம் கழுவும் வேலைக்கு சலாம்- தண்ணீர் பிரச்சனை தணியும். கணவன் மனைவி வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் அப்பப்பா எவ்வளவு நிம்மதி!

—எழில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# 𝒰 அரசியல் வாதிகளின் ஆடை

ராஜாஜி, காங்கிரஸ் கட்சியின் முதல் பிரதம அமைச்சராய் 1934–இல் பொறுப்பேற்ற போது, அமைச்சர்களுக்கு எவ்வளவு சம்பளம் தரலாமென்ற அறிவுரையைக் காந்தியடிகளிடம் கேட்டார். அதற்குக் காந்தி "நானும் நீங்களும் ஒரு குர்தா, வேட்டியுடன் சமாளிக்க முடியும், எனவே ரூ. 75/– எனக்கும் உங்களுக்கும் மாதச் சம்பளமாகத் தந்தால் போதுமானது. ஆனால் நம்மிடையே நவநாகரிக மோகமுடையஒருவர் இருக்கிறாரே–ஜவகர்லால்நேரு அவருக்கு நான் ரூ. 500/– சிபாரிசு செய்கிறேன்" என்றார்,

அரசியல் வாதிகளில் மிக ஆடம்பரமாக உடையணியும் மரபைத் தோற்றுவித்தவர் நேரு. நேரு மட்டுமின்றி அவர் குடும்பத்தினரிடமும் ஆடை மோகம் வழி வழியாக இருந்தே வருகிறது. அவரது சகோதரி விஜயலட்சுமி பண்டிட், இந்திய அரசின் சார்பில் மாஸ்கோ சென்றிருந்தபோது, அவருக்கு வரவேற்புப் பரிசாக சிலர் பரிந்துரைத்தபடி 200 அழகிய சேலைகள் வழங்கப்பட்டன.

தான் செல்லும் இடங்களுக்கேற்ப, தனது சேலையின் வண்ணமும், தரமும் அமைய வேண்டுமென்பதில் இந்திரா காந்தி கவனமாக இருப்பார். தான் அன்று அணியும் ஆடைகளை அவரே தேர்ந்தெடுப்பார். இந்தியாவெங்குமுள்ள ஆடை வகைகள் அவரிடம் இருந்தன. பாராளு மன்றத்திற்குச் செல்லும்போது, பிற பெண் எம். பி. கள் அவருடைய சேலையைப் பாராட்டி உரைப்பதுண்டு. ஒரு முக்கிய பிரமுகரைப் பார்க்கும்போதோ, ஒரு நாட்டுக்குச் செல்லும்போதோ ஒரு முறை உடுத்திய ஆடையை மறுமுறை இதே நிகழ்வில் உடுத்தாமல் இருப்பதில் கவனமாக இருந்தார்.


குர்த்தா-பைஜாமா போடும் பழக்கத்தை அரசியல் வாதிகளிடையே நாகரிகமாக்கியவர் ராஜீவ் காந்தி. தன் தாயாரைப் போலவும், பாட்டனாரைப் போலவும் சிறந்த ஆடைகளைத் தேர்ந்தெடுத்து அழகாக அணிவதில் இவருக்கும் மிகுந்த ஈடுபாடு உண்டு.

இன்றைய மத்திய அரசியலில் சிறந்த ஆடை அணிவதில் மிகுந்த கவனம் செலுத்தும் 10பேர்களாக ராஜீவ் காந்தி, மாதவராவ் சிந்தியா, ஜெயந்தி நடராஜன், வைஜயந்திமாலா பாலி, அமர்ஜித் கார், உபேந்திரா, தாரிக் அன்வர், ஷீலா தீட்சித், நஜ்மா ஹெப்துல்லா, சரோஜ் கபார்டே ஆகியோர் கணிக்கப்படுகின்றனர். — இசு

திருத்தம் கவனிக்க: பக்கம் 23 (கடைசி உள் அட்டை) ஜெயகாந்தன் பதிலுக்கு முன் கேள்வி:

*கையில் ஆயுதம் வைத்துக் கொள்வீர்களா?*

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வியட்நாம்

வியட்நாம் என்றால் தென்னாட்டு மக்கள் என்று பொருள். கிழக்கு இந்தோ-சீனாவிற்கு 1946இல் தான் இப்பெயரிடப்பட்டது கி.மு. 111 லிருந்து கி.பி. 939 வரை வியட்நாம் மக்கள் சுமார் 1000 ஆண்டு சீனர்களிடம் அடிமைப்பட்டிருந்தனர். பின் மங்கோலியர், பின், மீண்டும் சீனா, கடைசியாக 19 ஆம் நூற்றாண்டில் பிரஞ்சுக்காரருக்கு அடிமையாயினர். காலந்தோறும் அந்நிய ஆக்ரமிப்பை எதிர்த்து வந்த இவர்களின் போராட்ட உணர்வு 20 ஆம் நூற்றாண்டில் ஹோசிமின் என்ற மாபெரும் புரட்சித்தலைவன் தலைமையில் முழுமையடைந்தது. 1954 இல் பிரஞ்சு ஆதிக்கத்தை இடதுசாரி புரட்சியாளர்களின் வியட்மிங் என்ற முன்னணி குடை சாய்த்தது. பிரஞ்சுக்காரர்கள் நொடிந்து போனதால் போர் செலவில் 3/4 ஐ அமெரிக்கா ஏற்றது இதன் பின் ஏற்பட்ட ஜெனிவா சமாதான ஒப்பந்தப்படி வியட்நாம் வடக்கு. தெற்கு என இரண்டாக்கப்பட்டு, வடக்கு புரட்சியாளர்கள் ஆதிக்கத்திலும் தெற்கு அமெரிக்காவின் பொம்மை அரசிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தப்படி 1956 இல் தேர்தல் நடத்தினால் தெற்கும் ஹோசிமின்னுக்கு ஆதரவாக அமையும் என அமெரிக்கா நம்பியதால் தேர்தலை நடத்தாமல், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் இயக்கத்தின் மேல் அடக்கு முறையை ஏவியது.

இதனை எதிர்த்து வலுப்பெற்று வந்த கொரில்லா இயக்கத்தை அடியோடு அழித்து, தன் நலனையும் கௌரவத்தையும் காப்பாற்ற 1963 இல் அமெரிக்காவை வியட்நாமின் மேல் நேரடியாக மோதவிட்டவர் கென்னடி தான்.

5 லட்சம் அமெரிக்க துருப்புகளும் 6 லட்சம் கூலிப்படைகளும் உலகத்தின் மிக நவீன போர்க்கருவிகளும் வியட்நாமை 10 ஆண்டுகள் ரணகளமாக்கின.


*2ம் உலகப்போரில் எல்லா நாடுகளும் சேர்ந்து செலவிட்ட குண்டுகளைவிட அதிக குண்டுகள் இந்த மண்ணில் வெடிக்கப்பட்டன. (75,000 டன்) பயன்படுத்தப்பட்டன. ரசாயனப் போரிலும் அமெரிக்கா இறங்கியது. போபால் விஷ வாயுவால் கசிந்த நஞ்சைவிட இங்கு அதிக நஞ்சு மக்களின் மேல் வெளிவிடப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் அமெரிக்கா தனது அத்தனை இராணுவக்கண்டுபிடிப்புகளையும் பரிசோதிக்கும் தளமாக வியட்நாமைப் பயன்படுத்திக்கொண்டது. அமெரிக்க துருப்புகளின் காமவெறிக்கு இரை போட ஆயிரக்கணக்கான வியட்நாம் பெண்கள் விபச்சாரிகளாக்கப்பட்டனர். இளைஞர்களிடம் போதைப் பொருட்கள் பழக்கப்படுத்தப்பட்டன.*

இவ்வளவு மாபாதக கொடுமைகளையும் மனந்தளராது எதிர்நீச்சலிட்டு வியட்நாம் மக்கள் அமெரிக்காவை 30-4-75-இல் தலைகுனிவுடன் தோல்வியுறச் செய்தனர். பிரிந்த வியட்நாம் ஒன்றாகி புதிய சோஷலிச மக்களாட்சி அமைக்கப்பட்டது எனினும் இந்தப் புதிய நாடு சந்தித்து வரும் சவால்கள் கொஞ்சமல்ல.

வியட்நாமும், இந்தியாவும் ஏகாதிபத்தியங்களை வெவ்வேறு முறைகளில் போராடி 20-ஆம் நூற்றாண்டைப் பாதித்த நாடுகள் வியட்நாம் தலைநகர் ஹனாய் கல்கத்தாவிலிருந்து பம்பாய் செல்லும் சமதூரத்தில் தான் உள்ளது. வியட்நாம் மக்களின் மேல் வெறுப்பு ஏற்படுத்தும் மூன்றாந்தர அமெரிக்கா திரைப்படம் ரம்போ-II அண்மையில் சென்னையில் கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் ஓடியது அருவருப்பானதாகும். வீரச்செறிந்த வியட்நாம் மக்கள் போராட்டத்திற்கு ஆங்கிலப் படம் பார்க்கும் நம் நடுத்தர வர்க்கம் செலுத்தும் மரியாதை இது தான்.

—உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கலர் மோகம்

வண்ணத்தையும், பளபளப்பையும் பார்த்துப் பொருட்களை வாங்கும் மோகம் நமக்குண்டு. இந்த மோகத்தின் மேல் வியாபாரிகள் சவாரி செய்கிறார்கள்.

பச்சை, ரோஸ் வண்ண இனிப்புகள், வெள்ளைநிற இனிப்புகளை விட அதிகமாக விற்கின்றன. வடக்கே இந்த கலர் ஸ்வீட் மோகம் மிக அதிகம். இனிப்புகளுக்குக் கலர் சேர்ப்பது பெரும்பாலான நாடுகளில் தடை செய்யப் பட்டுள்ளது. காரணம், வண்ணங்கள் இரசாயன கலவைகளால் ஏற்படுத்தப்படுபவை இவை உடலுக்குள் சென்றால் பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

இதைப் பற்றியெல்லாம் ரொம்ப நாட்களுக்குக் கவலைப் படாமல் இருந்த நம் அரசு உடலுக்கு ஊறு விளைவிக்காத 11 கலர்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் சட்டம் கொணர்ந்தது.

சில பெரிய மிட்டாய் கம்பெனிகள் மட்டும் 'அனுமதிக்கப்பட்ட வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன' என்று அச்சிட்டுக் கொண்டாலும், மற்றவர்கள் இந்தச் சட்டத்தை எந்த அளவு பின்பற்றுகிறார்கள் என்று தெரியவில்லை. அனுமதிக்கப்பட்ட வண்ணங்கள் கூட முற்றிலும் தீமையே இல்லாதவையா என்று சொல்வதற்கில்லை. அனுமதிக்கப் படாத வண்ணங்களைப் பயன்படுத்தல் கலப்படமாகக் கருதப்படும் என்று அரசு அறிவித்தாலும் ஸ்வீட் கடைக்காரர்கள் இதைப் பற்றிக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. இந்த வண்ணச் சேர்க்கையால் அஜீரணம், ரத்த சோகை, மூளை, நுரையீரல், சிறுநீரக இதயக் கோளாறுகள் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. தொடர்ந்து உண்பதால் புற்றுநோயும் வரக் கூடும். பெண்களுக்குக் கருப்பை பாதிக்கப் பட்டு குழந்தை உடல், மூளை பாதிப்புடன் பிறக்கக் கூடும்.

வண்ணக் கவர்ச்சி கண்ணுக்குக் குளிர்ச்சி, உடலுக்குத் தளர்ச்சி.

—ஸ்டெனிஸ்லாஸ்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# டை கட்டும் சிறுவர்கள்

அட! இந்த அந்நிய மோகம் நம்மோடு ஒழிந்து போகக் கூடாதா? நம் குழந்தைகளுக்கும் இந்த அடிமை மோகத்தைப் பரப்பிப் புதுப்பிக்க வேண்டுமா?

3-வயது குழந்தைகளுக்குக் கூட கழுத்தில் "டை" கட்டி வெள்ளையனைப் போல சீருடை உடுத்தச் சொல்லி வற்புறுத்தும் ஆங்கிலப் பள்ளிகளில் இடம் பிடிக்க எத்தனை பேர் விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

ஆங்கிலேயனின் தூய்மையையும், பழக்கத்தில் ஒழுங்கையும் சொல்லிக் கொடுப்பதை விட்டு விட்டு, அவனே கை விட்ட பல அசிங்கங்களைக் கௌரவமாக்குவதில் நமக்கு அபார ஆசை; பெருமை!

வெள்ளையனை விட அவன் நாகரிகத்தை கண்மூடித்தனமாகக் காதலிப்பவன் நம்மவன் என்பதற்கு எத்தனை சான்று வேண்டும்? ஆங்கிலப்பள்ளிகளுக்கு, பொன்னி கான்வெண்டு, விநாயகர் கான்வெண்டு என்று அர்த்தம் புரியாமல் பெயர் வைக்கிறார்கள். கான்வென்ட் என்றால் கிறித்துவ பெண் துறவிகளின் கன்னி மாடம். "சிஸ்டர்கள்" தங்கள் தங்குமிடத்துடன் நடத்திய பள்ளியே "கான்வென்ட்." இது புரியாமல், ஆங்கில வணிக மோகிகள் பெயர் வைக்கிறார்கள்.

குளிருக்காக வெள்ளையன் 'டை' கட்டுகிறான், கரண்டியில் சாப்பிடுகிறான் என்றால் நம் வெப்ப நாட்டு சிறார்களுக்கு எதற்கு "டை"? நம் சிறுவர்கள் காலில் காலுறையும், பூட்சும் திணிக்கச் சொல்வது அர்த்தமற்ற தண்டனையல்லவா? தமிழகத்தின் மிகக் குறைந்த வெப்ப நிலை-24° சி இங்கிலாந்தின் மிக உயர்ந்த வெப்ப நிலை 17° சி. இதை எண்ணிப் பார்க்க முடியாமல் அடிமை மோகம் நம் கண்களை மறைக்கிறது.

இங்கே வரும் வெள்ளைக்காரனே வெறும் உடம்புடன் உலாவுவதைப் பார்த்ததில்லையா? வசதியை நோக்கி அவன் நாகரீகம் அமைக்கிறான். அவன் களைந்தெறியும் ஆடை முறைகளை நம் குழந்தைகளுக்குப் போட்டு அனுப்புவதைப் பார்த்தால் அவன் நம்மைப் பரமார்த்த குருவின் சீடன் என்று நினைக்க மாட்டானா?

—அஞ்ஞானி

FREE E - BOOKS , www.thamizham.net.,

ooooooooooooooooooooooooooooooo

# வாசகர் எதிரொலி

ooooooooooooooooooooooooooooooo

°° பிப்ரவரி இதழில் எதைப் பாராட்டுவது எனத் திகைக்கும்படி எல்லாம் அருமையாக இருந்தன. சிறு பத்திரிக்கை ஆயினும் தன்னலம் கருதாது சமுதாயத் திறகாகத் தனிச் செய்திகள் பல தருவற்கு உமக்கு என் சமுதாய நன்றிகள்.

—தா. நீலகண்டன், பறக்கை

°° எம். ஜி. ஆர், கோவிலுக்கு அடிக்கல் நாட்டு விழா நடந்திருக்கும் விவரத்தைப் படித்தபோது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. இதையும் நம்பும் ஜனங்கள் ஜடங்களாக இருப்பதால் தான் இம்மாதிரியானவர்கள் ஆட்சியில் இருக்க முடிகிறது என்பதை எம்.ஜி.ஆர், நீருபித்து விட்டார்.

—எஸ்.வி. ராஜசேகர், சேப்பாக்கம்.

°° ஜெனரல் மெர்ச்செண்ட் என்ற முறையில் கூறு கிறேன்—கால்கேட் பற்பசை, பல்பொடி, அதில் அச்சிட்ட விலையைக் காட்டிலும் எங்களுக்கு 10 பைசா கூட. அதே போல சோப்பு அயிட்டங்கள் 20 பைசா கூட. உண்மை இப்படியிருக்க சம்பத் போன்ற சகோதரர்களின் கோபத்துக்கு ஆளவதோடு, விற்பனை வரி அதிகாரி எங்களைப்பதம் பார்க்கிறார்ள். அவர் எழுதியது முழுவதும் உண்மையல்ல.

—ப. ராம் முருகன், சிவகெங்கை

சுட்டியில் மீண்டும் பழைய சுட்டித் தனம் நிரம்பி வருகிறது.

—ஆர். பரமேஸ்வரன், பசாய் மராட்டியம்.


°° வாசகர் கதைகளை படிக்காமலே ஒதுக்கித் தள்ளும் சில பத்திரிகை ஆசிரியர்கள் தமது வெளியான கதைகளையே மீண்டும் பிரசுரித்து கொள்வது அவர்களின் தலையில் சரக்கு தீர்ந்து விட்டதையே வெளிப்படுத்துகிறது.

—பொன். ராஜேந்திரன், முருங்கம் பேட்டை

## அகிலன் மறைவில் சுட்டி

சுட்டிக்குத் தவறாமல் சந்தா செலுத்தியவர்; சுட்டியை மிகவும் விரும்பிப்படித்தவர்; பலருக்கும் சுட்டியை அறிமுகபடுத்தியவர்; சுட்டியை ஆக்கப் பூர்வமாக விமர்சித்தவர் எழுத்தாளர் அகிலன் சுட்டியின் கருத்துக்களுக்குச் செயல்பூர்வமான அமைப்பான "சுட்டி அறம் என்ற அறக்கட்டளைத் தொடங்கும் சிந்தனையை உருவாக்கியவர் அகிலன். அவரது இழப்பு சுட்டியை மிகுந்த வருத்தத்தில் ஆழத்தியுள்ளது. அவரது குடும்பத்தினர், நண்பர்கள் வாசகர்கள் சோகத்தில் சுட்டியும் பங்கேற்கிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# பதில்கள்

*? கல்வி முறை எப்படி இருக்கவேண்டும்?*

ரூஸோ : மாணவன் தான் வாழும் உலகத்தில் தனக்கான இடத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உழைப்பை விரும்ப வேண்டும். மனப்பாடம் செய்யும் பழக்கத்தை அவன் கற்றுக் கொள்ளக் கூடாது. வெறும் பயனற்ற வார்த்தைகள் அவன் மனதில் நிரம்பக் கூடாது. இயற்கையின் மாணாக்கனாக வளர வேண்டும். அவன் சொந்த அனுபவங்கள் மூலமாகவே பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்; வெறும் கால்களுடன் அவன் விளையாட வேண்டும். கல்வி இவற்றையெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஜெயகாந்தன் : எனக்கு ஆயுதமே வேண்டாம், ஆயுதமே அச்சத்தின் அடையாளம். என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நான் கையில் ஆயுதம் ஏந்து வேனேயானால் என்னைவிடக் கடைகெட்ட கோழை கிடையாது. ஸீஸர் சொல்லுவான்: "ஆபத்துகளுக்குத் தெரியும்—ஸீஸர் எவ்வளவு ஆபத்தானவன் என்று", எனவே வீரத்தைப் பற்றிய நினைப்பும், வீரர்களைப் பற்றிய எண்ணங்களும் கூட வீரராயிருக்க உதவுகிறது.

*? கவிதை எப்படி இருக்க வேண்டும்?*

சுஜாதா : பிரபல ஜப்பானியக் கவிஞர் ஒருவரை கவிதை எழுதுவது எப்படி என்று கேட்ட போது, "கவிதைக்கு நான்கு வரிகள் உண்டு. முதல் வரி கவிதையைத் தொடங்குகிறது. இரண்டாவது வரி தொடர்கிறது. மூன்றாவது வரி ஒரு புதிய கருத்தை ஆரம்பிக்கிறது. நான்காவது வரி முதல் மூன்றுவரி வரிகளையும் சேர்க்கிறது" என்றாராம். இப்படித் தான் இருக்க வேண்டும் கவிதை.

---

# சுட்டி

*தொடர்பு முகவரி:*
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை-600 040

சுட்டி ஆண்டுச் சந்தா : ரூ. 10
ஆயுள் சந்தா : ரூ. 150

FREE E - BOOKS ,.www.thamizham.net.,

Regd. No. TN/MS(N)/317

http://www.thamizhham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களம்




நன்றி ; டிரிபியூன்

## சிரித்து சிந்தியுங்கள்

எனக்கு வளவள என்று பேசி போரடிக்கும் கணவனைத் தேர்ந்து எடுத்துக்கொடு என்று கணிப்பொறியிடம் ஒருத்தி ஆணையிட்டாள்.
“தொலைக்காட்சியை மணந்து கொள்” என்று சொன்னது கணிப்பொறி.

“இந்த சோப்பு போன வாரம் ரூ. 1-25 என்கிறீர்கள், இன்று 1-75 என்கிறீர்களே”
“இன்று அத்துடன் இலவசமாக ஒரு ஸ்பூன் கொடுக்கிறோமே அதனால் தான்”

“புகார் புத்தகத்தில் எழுதாமல் சிறு காகிதத்தில் என்ன புகார் எழுதுகிறாய்”
“புகார் புத்தகத்தைக் காணோம் என்று”

“இன்று பால் கொண்டு வர ஏன் தாமதம்?
“தண்ணீர் பைப்பில் வர தாமதமானதால்”

FREE E - BOOKS , www.thamizhham.net.,